**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்.**

**O.S.74/2014** நாள்.20.12.19

பி.வா.சா.1 வீரணன்

4ம் பிரதிவாதியின் தரப்பில் கு.வி.

நான் அரசுப்பள்ளியில் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் ஆவேன். வழக்கின் வாதியும் நானும் நல்ல நண்பர்கள். இந்த வாதியின் மகன்தான் 2ம் பிரதிவாதி வள்ளுவன் என்றால் சரி. நான் 2ம்பிரதிவாதி வள்ளுவனிடமிருந்து கிரைய ஒப்பந்தம் செய்த கிரைய சொத்தின் சர்வே எண் தெரியாது என்றால் ஞாபகமில்லை. இந்த சொத்தின் நான்கு மால் விபரம் தெரியாது. இந்த சொத்து எந்த வருவாய் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் ஞாபகமில்லை. நானும் வள்ளுவனும் சேர்ந்து ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்தம் வாதிக்கு தெரியும் என்று சொன்னால் தெரிந்திருக்கலாம் என்று சாட்சி கூறினார். நானும் வள்ளுவனும் 3.5.2011 ம்தேதி கிரைய ஒப்பந்தம் செய்தோம். அந்த ஒப்பந்த சொத்து காசி என்பவருக்கு சொந்தமானது. மேற்படி காசி என்பவர் அவரது தாயாரிடமிருந்து தானம் பெற்ற சொத்தாகத்தான் இருக்கும் என்றால் சரிதான். காசி என்பவர் 2ம்பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பவர் ஆப் அட்டர்னி யை 8.12.2011 அன்று ரத்து செய்த விவரம் எனக்கு தெரியாது. நான் வள்ளுவனிடம் ருந்து ரூ.5,50,000/= கிரையம் பேசி ரூ.10,000/= செலுத்தியிருந்தேன். காசி என்பவர் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பவர் ஆப் அட்டர்னியை ரத்து செய்துவிட்டு 4ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது. வள்ளுவனுக்கும் 4ம் பிரதிவாதி தனபாலனுக்கும் தபசு சொத்து சம்பந்தமாக சிவகாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.4/2012 வழக்கு நடைபெற்று வருகிற விபரம் எனக்கு தெரியாது. நான் 2ம் பிரதிவாதி வள்ளுவனிடம் கிரைய ஒப்பந்தம் செய்ததின் அடிப்படையில் தான் தபசு சொத்தினை 2ம் பிரதிவாதியின் தகப்பனார் வாதிக்கு கிரையம் செய்து

கொடுத்தேன் என்றால் சரி. நான் வாதிக்கு தபசு சொத்தை கிரையம் செய்த போது கிரைய சொத்திற்குரிய வில்லங்க சான்றினை பார்க்கவில்லை. 25.1.2012 ம் தேதி நான் வாதிக்கு தபசு சொத்தினை கிரையம் செய்து கொடுத்தேன். நான் உத்தேசமாக ரூ.5,50,000/=ஐ வாதியிடம் பெற்றுக்கொண்டு சொத்தினை கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். 4ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதிக்கு விற்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்தது என்றால் சரியல்ல. வாதியிடம் சுவாதீனம் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் நான் பார்க்கவில்லை. 4ம் பிரதிவாதியிடமிருந்து சொத்தை அபகரிக்க நான், 2ம்பிரதிவாதி, வாதி ஆகியோர் ஒன்றாக இருந்து இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதியின் தரப்பில் கு.வி.

மேற்கண்ட கு.வி. சங்கதிகளை தனது தரப்பு கு.வி சங்கதிகளாக பாவிக்க வேண்டுமென கேட்டுகொள்ளப்பட்டது.

வாதியின் தரப்பில் கு.வி. இல்லை என தெரிவிக்கப்பட்டது.

ம.வி.

இல்லை.